# பணிநிறைவுப் பாராட்டு

திருமிகு **N.செல்வசேகர்** (30-04-2020)



முன்னூறு ஆண்டுகளாய் முகமோடு
வாழ்ந்திருக்கும் சென்னை சுங்கத்தில்
தொன்னூறும் தொகைநூறாய் இங்கு
என்னற்றோர் தாம்நடை பயின்றார்!
மன்னுபுகழ் காலமாம் அதுவே
மருவிலாத எங்கள் காலம்!
எண்பதுகள் தொடக்கத்தில் நாங்கள்,
இன்பமாய்ப் பலரும் சேர்ந்தோம்!

கண்ணியமாய் அன்போடு நாங்கள்
கரங்கோத்துப் பழகி வந்தோம்!
எண்ணத்தில் அன்பே யிருக்கும்
எவர் மனத்திலும் தீமை யில்லை!
ஆண்பெண் யாவருமே நாளும்,
அன்புடனே மகிழ்ந்தி ருந்தோம்!
தீண்டாச்சொல் மனங்க ளில்லை!
தீதுறு மொழியும் தானில்லை!

மொழிவழியாய்ச் சிந்தை யில்லை
முற்றாதச் ஒருச்செயலு மில்லை!
உழிபெறும் காலமாய் இன்று,
உவகைதனை இழந்து விட்டோம்!
அழியாப் புகழ் அதுவே எங்கள்,
அன்புதனில் தானி ருக்கும்!
விழியெனவாய் நிறைந்த நல்ல
அமைச்சுப் பணியில மர்ந்தோம்!

பதவி உயர்வாலே நாமமேதான்,
இடம் பெயர்த்து நடப்பட்டோம்!
ஆதலினால் மனம் சூடும் எங்கள்
அன்பினில் என்றும் குறையில்லை!
பேதமைச் செய்வதுஇப் பணிநிறைவே!
பிரிகின்றோம் அங்கங்கே சிலரைத்தான்!
மாதமாம் இத்திங்கள் எங்கள்
**செல்வ சேகர்** தனக்குப் பணி நிறைவு!

– வேறு –

உள்ளம் உருகிடவும், ஓர் நொடியில் திளைத்திடவும்,
கள்ளமாய் மனத்துள்ளே கற்கண்டுச் சிந்தனைகள்!
எள்ளளவும் பிசகாத அன்பிலே திளைத்திருந்தோம்!
துள்ளிய இளமையதும் கழன்று விடத்தொடங்கும்,

தொல்லை அறுபதெனில் யாவரும் பணிமுடித்து,
இல்லம் சென்றிடல் என்பதுவும் இயல்பன்றோ!
மெல்லச் சிறகசைத்து **செல்வசேகர்** தமக்கும்,
நல்லதாய் விடை கொடுத்து வாழ்த்தி மகிழ்ந்திடுவோம்!

**30-04-2020**

அன்புடன்,
**நண்பர்கள்,**
**சுங்க இல்லம், சென்னை.**